கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.328/2014** தேதி:**27.06.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (சரளா, க/பெ.குமாரசாமி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**2,3,5,6,12** முதல் **16** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

14 ஆம் பிரதிவாதி ரம்யாவின் பெயர் தவறு என்றாலும் அவரது சரியான பெயர் பிரியதர்ஷ்னி என்றாலும் பிராதில் ரம்யா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அது மாற்றப்பட வில்லை என்றாலும் எனக்கு தெரியாது. 15 ஆம் பிரதிவாதி பெயர் ரஞ்சித் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவரது சரியான பெயர் தனவந்தினி என்றாலும் 16 ஆம் பிரதிவாதியின் பெயர் ரவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவரது பெயர் சன்முகசுந்தரம் என்று எதிர் வழக்குறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றாலும் இன்று வரை பெயர் மாற்றம் செய்யவில்லை என்றாலும் எனக்கு தெரியாது. இதே சர்வே எண் சம்மந்தமாக தேவி என்பவர் நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அசல் வழக்கு 324/2014 ல் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எல்லாம் பாக வழக்கு நிலுவையில் உள்ள போது ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. கிரையம் கொடுப்பவர்கள் பாகம் பிரியாமல் கொடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை என்றால் எனக்கு தெரியாது. பாக வழக்கு நிலுவையில் இருக்கும் போது கிரையம் வாங்கினாலும் அல்லது எவ்வாறான வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரையம் வாங்கினால் அது செல்லாது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு 135/2003 என்ற பாக வழக்கில் உங்களுக்கு கிரையம் கொடுத்தவர் தரப்பினராக இருந்ததால் அந்த கிரையம் செல்லாது என்றால் எனக்கு தெரியாது.அந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க அவசியம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அசல் வழ்குக 135/2003 ல் கொடுக்கப்பட்ட தீர்ப்பினை ரத்து செய்யாத வரையில் உங்களுக்கு கொடுக்கப்ட்ட கிரையம் செல்லாது என்றால் எனக்கு தெரியாது. வழ்க்கு சொத்தினை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தானது நிலைக்கத்தது என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது .

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.06.27 17:04:19 +0530